
பாடம் - 13

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# மனித ஆத்துமா பாகம்- 3






# THE HUMAN SOUL PART-3

For Further Details : E-Mail us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

# மனித ஆத்துமா பாகம்-3

## ஐசுவரியவானும் ஏழை லாசருவும்(லூக்கா 16:19-31)



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

கடந்த இரண்டு பாடங்களில் மனித ஆத்துமாவைப்பற்றி தெளிவாய்ப் புரிந்துகொண்டோம். **மனித ஆத்துமா அழியக்கூடியது, மரிக்கக்கூடியது** என்றும் வசனங்கள் மூலம் அறிந்தோம். மேலும் **மனிதனுக்குள் ஒரு ஆத்துமா என்றில்லாமல், மனிதனே அந்த ஆத்துமா** என்றும் அறிந்தோம். இதன் இறுதிப்பகுதியை இன்று நாம் தியானிக்க இருக்கிறோம். அந்த வேதப் பகுதியானது,'' **ஐசுவரியவான் மற்றும் ஏழை லாசர்**'' பற்றினதாகும். இதைக்குறித்து நாம் **லூக்கா 16:19-31** வரை வாசிக்கையில்... (முழுமையாக வாசிக்கவும்).

இந்த வேதப்பகுதி பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களாலும் இரண்டு முக்கிய உபதேசங்களுக்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது. அவை,

**1.மரணத்திற்குப் பிறகு மரிக்காத,
அழியாத ஆத்துமாவின் நிலைமை பற்றின உபதேசம்**

**2.நித்திய ஆக்கினைக்கான இடமாக கருதப்படும் நரகம் பற்றின உபதேசம்**

ஏனெனில், பொதுவாக ஐசுவரியவான் நரகத்திற்குப் போனதாகவும். ஏழை லாசர் பரலோகத்திற்குப் போனதாகவும் போதிக்கப்படுகிறது. இந்த வசனப்பகுதிகள் சொல்லர்த்தமான சம்பவமாக கருதப்பட்டு வருகிறது. ஆனால் 20முதல் 24 வசனங்களை நிதானமாக வாசிக்கையில் அவை சொல்லர்த்தமாக எழுதப்படவில்லை என்றே உணருகிறோம்.

**லூக்கா 16:20 - "லாசர் என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்.
அவன் பருக்கள் நிறைந்தவனாய்,
அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து..."**

இங்கு ஏழை லாசர் ஐசுவரியவானுடைய வீட்டுவாசல் அருகில் கிடந்ததாகக் காண்கிறோம். இது நிரந்தர ஏற்பாடுபோல் காணப்படுகிறது. மேலும் ஐசுவரியவான் தன்னுடைய மிகுதியான உணவை

லாசருக்கு அனுப்பினதாகக் காண்கிறோம். இன்று எத்தனை ஐசுவரியவான்களின் வீட்டுவாசலில் இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்துள்ளனர்? ஒருவேளை நீங்கள் இப்படிப்பட்ட ஒரு காரியத்தை உங்கள் வீட்டு வாசலில் அனுமதிப்பீர்களா? ஆனாலும், இந்த ஐசுவரியவான் கெட்டவனாக இருந்து மரித்து நரகத்திற்குப் போனான் என்றும் நாம் நம்புகிறோம்.

**லூக்கா 16:21 - "நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று..."**

நாம் நம்மைச் சுற்றியுள்ள பிச்சைக்காரர்களையும் குஷ்டரோகிகளையும் பார்த்திருக்கிறோம். சிலர் கை கால்கள் இல்லாமலும், சிலர் புண்களோடும் காணப்படுகின்றனர். ஆனாலும் அவர்களில் ஒருவரும் தங்கள் புண்களை நக்குவதற்கு நாய்களை அனுமதிப்பது நாம் காணாத ஒன்றாகும். ஒருவேளை அனுமதித்தால், அது அவர்களுக்கு மிகுந்த அவமதிப்பாக இருக்கும். அதனால் ஏழை லாசரைக்குறித்து சொல்லப்பட்ட காரியம் சொல்லர்த்தமாக நடைபெறுவது சாத்தியமற்றது.

அப்படியென்றால் இந்தக் காரியம் எதைக்குறிக்கிறது என்பதை இப்பாடத்தின் பிற்பகுதியில் அறிந்துகொள்ளலாம். அதற்கு முன்னதாக வேறொரு வசனத்தை வாசிப்போம்;

**லூக் 16:24 - "அப்பொழுது அவன், தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும், இந்த அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறேன் என்று கூப்பிட்டான்"**

நெருப்பு எரிவதையும் அது வெளிவிடும் அனலையும் கொண்ட இந்தக் காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். அவன் நாவுக்கு கிடைக்கும் வெறும் ஒரு சொட்டு தண்ணீர் அவனை தாகத்திலிருந்து விடுவிக்குமா? இந்தக் காரியத்தை, கடும் வெய்யில் அடிக்கும் உஷ்ணமானவேளையில், ஒரு சொட்டு தண்ணீர் உங்கள் நாவில் விடுவதன்மூலம் தாகத்திலிருந்து விடுதலை கிடைக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். கற்பனை செய்து பார்ப்பதற்கு இது ஒரு வேடிக்கையான செயலாகும்.

மேலும், எரிகிற அக்கினியின் நடுவில் ஐசுவரியவான் இருக்கும் நிலையை கற்பனை செய்து பாருங்கள். இந்த சூழ்நிலையில் ஒரு சொட்டு தண்ணீர் அவனுடைய நாவை குளிரப்பண்ணுமா? நிச்சயமாக இது சொல்லர்த்தமாக எழுதப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆகவே இந்த வசனப்பகுதி குறிப்பது என்னவாக இருக்கும்? இயேசு பேசுகையில் எப்பொழுதும் உவமை பாணியிலேயே பேசினார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதைக்குறித்து நாம் **மத்தேயு 13:34**ல் வாசிக்கையில்...

**"இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை"**

**ஆம். இந்தப் பகுதி துவங்கும் விதத்தை இயேசுபேசின மற்ற உவமைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.**

**லூக்கா 15:11- "ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்.."**

**லூக்கா 16:1- "ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு..."**

**லூக்கா 19:12- "பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப்.."**

**லூக்கா 20:9- ".. ஒரு மனுஷன் ஒரு திராட்சத் தோட்டத்தை..."**

ஒவ்வொரு உவமை துவங்கும்போதும் ஒரே பாணி கடைப்பிடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆகவே லாசரு ஐஸ்வரியவான் பற்றியதும், இயேசுகிறிஸ்து பேசின ஒரு உவமையாக இருக்கவேண்டும் என்று நாம் உணருகிறோம்.

இப்பொழுது இந்த உவமையின் பொருளை உவமை பாஷையில் அறிந்துகொள்ளலாம். இங்கு இயேசு **"ஐசுவரியவான்"** மற்றும் **"ஏழை லாசர்"** இவ்விருவர்மூலம் இரண்டு வகுப்பாரை குறிப்பிடுகிறார்.



**"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான், அவன் இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரம் தரித்து அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான்"**

இங்கு ஐசுவரியவான் ஒரு வகுப்பாரைக் குறிக்கிறார். **இஸ்ரயேல் தேசமே அந்த ஐஸ்வரியவான்கள்.** இங்கு **"இரத்தாம்பரம்"** என்பது இராஜாக்கள் உடுத்தும் ராஜரீக நிறத்தைக் குறிக்கும். இது **யோவான் 19:2,3** வசனங்களில், இயேசு கிறிஸ்து இரத்தாம்பர அங்கி தரிக்கப்பட்டு **"யூதர்களின் இராஜா"** என்று கேலியாக அழைக்கப்பட்டதின்மூலம் நிரூபணமாகிறது.

ஆனால் இங்கு இரத்தாம்பரம் என்பது இஸ்ரயேலைப் பொருத்தமட்டில், அவர்கள் **"ராஜரீக வாக்குத்தத்தங்களை"** உடுத்தியிருந்ததைக் குறிக்கின்றது.

**யாத்திராகமம் 19:5,6 - "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் . பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்".**

தேவன் தம்முடைய இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்களால் இஸ்ரயேல் ஜனங்களை அணிவித்திருந்ததை இரத்தாம்பரம் குறிக்கிறது. இஸ்ரயேல் தேசத்தைப்போன்று வேறு எந்த தேசமும் தேவனுடைய வார்த்தைகளாலும், ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிக்கப்படவில்லை. இதைக் குறித்து

**உபாகமம் 4:6-8,33 - "ஆகையால் இவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள். ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும். அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுது கொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதிஏது? இந்நாளில்தான் உங்களுக்கு விதிக்கிற**

**இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும்எது? அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டதுபோல யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ?"**

ஆம். இதன்மூலம் "ஐசுவரியவான்" தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றிருந்த இஸ்ரயேல் ஜனங்களைக் குறிக்கிறார். உண்மையில் பழையஏற்பாடு முழுவதும் மற்றும் தீர்க்கதரிசன வார்த்தைகளும் அவர்களுக்கே வெளியாக்கப்பட்டது. யூத யுகம் முழுவதுமாக அனைத்து தீர்க்கதரிசிகளும் அதாவது ஏசாயா முதல் மல்கியா வரை இஸ்ரயேலர்களிடம் பேசவே அனுப்பப்பட்டனர். உண்மையிலேயே அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை "அனுதினமும்" சம்பிரமாய் சாப்பிட்டனர்".

மேலும் இப்பொழுது ***இஸ்ரயேலின் ஆவிக்குரிய ஐஸ்வரியத்தை***க் காணலாம்.

**ஆமோஸ் 3:2 - "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்"**

ஆம். உலகம் முழுவதிலுமிருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரே ஜாதியாக இஸ்ரயேலர் இருந்தனர். மேலும் இவர்களின் மேன்மையைக் குறித்து நாம் வாசிக்கையில்,



**ரோமர் 3:1 - "யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன? "**

யூதனுக்கு தரப்பட்ட ஆசீர்வாதம் அல்லது **"ஐஸ்வரியம்"** என்பது என்ன?



**ரோமர்9:4,5-"அவர்கள் இஸ்ரயேலரே, புத்திர சுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே. பிதாக்கள் அவர்களுடையவர்களே. மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்".**

ஆம் இது உண்மையில் இஸ்ரயேலர் தேவனிடமிருந்து பெற்ற ஆவிக்குரிய ***ஆசீர்வாதங்கள், ஐஸ்வரியங்களின் முழுமையான பட்டியல்*** ஆகும். உண்மையாகவே இங்கு இஸ்ரயேலர் மிகச் சரியாக ஐசுவரியவான்கள் என்றழைக்கப்பட்டுள்ளனர்.



இப்படியாக இயேசு இஸ்ரயேல் தேசத்தை தம்முடைய வார்த்தைகளின் மூலம் சித்தரித்திருந்ததை நாம் காண்கிறோம்.

அடுத்ததாக, **ஏழையைக் குறித்த உண்மைகள்** என்ன என்று காணலாம்.



**லூக்கா 16:20-21 "லாசர் என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று".**

இங்கு **"லாசர்"** என்று பேர்கொண்ட **"தரித்திரன்"**, ***யூதர்கள் அல்லாத - புறஜாதிகளை*** சித்தரிக்கிறது எப்படி என்று நீங்கள் கேட்கலாம்? இதில் கூறப்பட்டுள்ள அடையாளங்களை ஒவ்வொன்றாய் நாம் காண்போம்:

**"ஒரு தரித்திரன்"** - ஆம். புறஜாதிகள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஏதும் பெற்றிராத ஏழ்மை நிலைமையில் இருந்தனர்.

**"உடல் முழுவதும் பருக்கள்"** - இது புறஜாதிகள் பாவத்தினால் நிறைந்திருந்த நிலைமையைக் குறிக்கிறது. அவர்களது பாவங்கள் நிவர்த்தியடைவதற்கான வழி ஏதுமில்லாதவர்களாய், பரிசுத்தமாக்கப்படாமல் இருந்தனர். மன்னிக்கப்படாத பாவ நிலையில் அவர்கள் இருந்ததை இந்தப் "பருக்கள்" குறிக்கிறது.

**"வாசலருகே"**- அவர்கள் தேவனுக்கு **"விலகி தூரமாயிருந்ததை"** குறிக்கிறது. ஏனெனில், **"வீடு"** என்பது இஸ்ரயேல் தேசம் தேவனுக்கு அருகாமையில் இருந்த **ஆசீர்வாதமான நிலைமை**யைக் குறிக்கிறது. மேலும், ஐஸ்வரியவானுடைய **"வீட்டின் சுவர்"** என்பது **நியாயப்பிரமாண உடன்படிக்கை**யைக் குறிக்கிறது.

**எபேசியர் 2:14 - "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து..."**

மேலும் **"வாசல்"** என்பது - **விருத்தசேதனத்தின் உடன்படிக்கையைக்** குறிக்கிறது**(ஆதியாகமம் 17:12-14)** இதன்மூலமே **ஒருவன்** யூதனாகக்கூடிய வாய்ப்பிற்குள் **நுழைகிறார்.** புறஜாதிகள் இந்த **"சுவர்"** மற்றும் "வாசலுக்கு" **புறம்பான** நிலையில் இருந்தனர்.

**"துணிக்கைகள்" -** இது புறஜாதிகள் தேடின அல்லது வருந்திக்கேட்ட **"சில"** தெய்வீக ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது. இதை இயேசுவிற்கும் கானானிய ஸ்திரீக்கும் நடந்த உரையாடலை நாம் கவனிக்கும்போது உணரலாம். **(மத்தேயு 15:25-28** இல் வாசிக்கவும்)

**"நாய்கள் பருக்களை நக்கிற்று"**- நாம் ஏற்கனவே பார்த்தபடி பருக்கள் என்பது மன்னிக்கப்படாத பாவ நிலைமையைக் குறிக்கிறது. அப்படியிருக்க புறஜாதிகள் பாவத்திலிருந்து விடுபடுவதை அல்லது பாவநிவர்த்தியின் மூலம் பெறும் சமாதானத்தை இவைகள் குறிக்கும்.

**"நாய்கள்" - லேவியராகமம் 11:27**ல் வாசிக்கிறபடி, **ஒரு அசுத்தமான விலங்காகும்.**

புறஜாதிகள் அசுத்தமான வழிகள் மூலம் தேடின பாவ நிவாரணத்தை சித்தரிக்கிறது. எப்படியெனில், விக்கிரகஆராதனை, கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள், குழந்தை பலி, ஆலயங்களில் விபச்சாரம் போன்றவையாகும். ஆம். இதுவே புறஜாதிகள் இருந்த நிலையாகும். அடுத்து நாம் வாசிப்பது என்ன?

**லூக்கா 16:22 - "பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்"**

ஆம். இங்கு மரணம் என்பது ஒரு முடிவைக் குறிக்கிறது. எது முடிவடைந்தது? **"இருவரும் மரித்தார்கள்"** அல்லது **யூதர்களுக்கான ஆசீர்வாதமற்ற காலம்- சுவிசேஷயுகத்தின் துவக்கத்துடன் முடிவடைந்தது.**

**"லாசர்"**- இவன் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, புறஜாதிகளுக்குள் கிறிஸ்தவர்களாக மாறினவர்களைக் குறிக்கிறான்.

**"தூதர்களால் ஆபிரகாமின் மடிக்கு கொண்டு செல்லப்பட்டான்"** - இது எதைக்குறிக்கிறது என்று நாம் வாசித்து உணரலாம்;

**"தூதர்கள்" -** ஆதிகால சபையில் புறஜாதிகளின் நிமித்தம் சுவிசேஷத்திற்கு தூது சென்றவர்களை குறிக்கிறது. விசேஷமாக **அப்போஸ்தலர் பேதுரு**- இவர் கொர்நேலியுவின் வீட்டில் **"புறஜாதிகளுக்கான கதவை திறந்தார்"**. மற்றும் **அப்போஸ்தலனாகிய பவுல்**- புறஜாதிகளுக்காக விசேஷமாக **"தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக"** இருந்தார் **(கலாத்தியர்2:8)**. மற்றும் இவர்களுடன் சென்ற பர்னபா, தீத்து, சீலா, லூக்கா போன்றவர்களைக் குறிக்கும்.

**"ஆபிரகாமின் மடி"** - என்பது ஆபிரகாமின் பிள்ளைகளாக மாறி...

**கலாத்தியர் 3:7 "ஆகையால் , விசுவாச மார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக"**

அதன்மூலம் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கும் கிறிஸ்துவைக் குறிக்கிறார்கள்**(கலாத் 3:16, 3:29)**. ஆம் , கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக மாறுவதற்கு புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு பொன்னான வாய்ப்பை குறிக்கிறது.

பின்பு "ஐசுவரியவானை" குறித்து நாம் வாசிப்பது என்ன?

**"ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்"** என்று வாசிக்கிறோம்.

இது **இஸ்ரயேலர்களுக்கான ஆசீர்வாதக் காலமாகிய யூத யுகம் எவ்வாறு முடிவடைந்தது என்பதையும், தேசம் எவ்வாறு புதையுண்டு, பார்வையிலிருந்து முற்றிலுமாக அகன்று, கிபி 70க்கு பின்பு தேசமாக கருதப்படாமல் போனதைக் குறிக்கும்.** பின்பு நாம் வாசிக்கையில்,



**லூக்கா 16:23,24 - "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து. தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். இப்பொழுது அவன், தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி , லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும். இந்த அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்"**

இது எதைக் குறிக்கிறது?

இது கிபி 70க்குப் பின் இஸ்ரயேல் தேசத்தின் நிலைமையையும், உலகம் முழுவதும் உள்ள தேசங்களுக்குள்ளும் அவர்கள் சிதறடிக்கப்பட்டதைக் குறிக்கும். இதைக் குறித்து வாசிக்கையில்,

**சகரியா 7:13,14 - "ஆதலால் நாம் கூப்பிட்டபோது, அவர்கள் எப்படி கேளாமற் போனார்களோ, அப்படியே அவர்கள் கூப்பிட்டபோது நானும் கேளாமலிருந்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைப் பறக்கடித்தேன், அதினால் அவர்கள் பின்வைத்துப்போன தேசம் போக்குவரத்தில்லாமல் பாழாய்ப் போயிற்று.அவர்கள் இன்பமான தேசத்தைப் பாழாய்ப்போகப் பண்ணினார்கள் என்றார்"**

ஆம். இது அவர்களுடைய **அடிப்படை மனித உரிமைகள்கூட மறுக்கப்பட்டநிலையில் அடைந்த உபத்திரவங்களை** சித்தரிக்கிறது.

**அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறது"** - இங்கு அக்கினி என்பது, இஸ்ரயேல் தேசத்தின்மீது வந்த நியாயத்தீர்ப்பிற்கு அடையாளமாக இருக்கிறது. இதை இயேசு அவருடைய வார்த்தைகளில் கூறும்போது,

**மத்தேயு 23:38 - "இதோ , உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்"**

இந்த வார்த்தைகளே அவர் கிபி 33ம் வருடம் சிலுவையில் அறையப்படுமுன் பேசினார். பின்பு இந்த வார்த்தைகளே இஸ்ரயேல் ஜனங்கள் கேட்டபிரகாரமாக, அவர்கள்மேல் நியாயத்தீர்ப்பாக நிறைவேறினது. இதைக்குறித்து **மத்தேயு 27:25**இல் வாசிக்கிறோம்:

**"அதற்கு ஜனங்களெல்லாரும் , இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்"**

கிபி 70இல் இருந்து சுவிசேஷயுகம் முழுவதுமாக அவர்கள் அடைந்த இந்த **நியாயத்தீர்ப்பு** மற்றும் **உபத்திரவங்கள்** , இங்கு அக்கினி மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. **அக்கினி** தேவனுடைய நியாயத்தீர்ப்பை குறிக்கும் என்பதை கீழ்வரும் வசனங்களில் வாசிக்கிறோம்**(ஏசாயா 66:15,16).**

**செப்பனியா 3:8 - "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் சினமாகிய உக்கிர**

**கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன். பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்"**

**"தூரத்திலே ஆபிரகாமை அவன் கண்டு"** - இது இஸ்ரயேல் ஜனங்கள் தேவனுடைய பட்சத்தில் இராமல், தூரமாக இருப்பதாக உணர்ந்ததைக் குறிக்கிறது.

**"ஆபிரகாமின் மடியில் லாசரு"** - இது சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்தவர்களாகிய புறஜாதி தேசத்தாரின் ஆசீர்வாதமான நிலையைக் குறிக்கிறது.

**"லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்"** - இது யூதர்கள் போய் தங்கின கிறிஸ்தவ தேசத்தாரிடம் எதிர்பார்த்த சிறு உதவிகளாகிய - வீடுகள், பள்ளிக்கூடங்கள், கட்டிடங்கள், தேவாலயங்கள் கட்டும் இடங்களுக்காக தேவனிடம் ஏறெடுத்த ஜெபங்களை குறிக்கும். பின்பு நாம் வாசிப்பது என்னவெனில்,

**லூக்கா 16:25 - "அதற்கு ஆபிரகாம்- மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான். அதை நினைத்துக்கொள், இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்"**

ஆம். இது **தேவன் தாமாக பேசுகிறதாக** கூறப்பட்டுள்ளது, அவர் எப்படிப் பேசுகிறார்? தம் வார்த்தைகளின் மூலமாகவே. வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற **"யுகங்களைப்பற்றின தேவ ஏற்பாட்டின்மூலமாகவே மறுஉத்தரவு"** அருளுகிறார்.

**யூதயுகம் - யூதருக்கு ஆசீர், புறஜாதிகளுக்கு ஆசீரற்ற நிலைமை**

**சுவிசேஷயுகம் - விசுவாசிக்கிற புறஜாதியாருக்கு ஆசீர், பார்வையிழந்த யூதருக்கு உபத்திரவக் காலம்.**

மேலும் நாம் வாசிக்கையில்,

**லூக்கா 16:26 - அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கூடாதபடி, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்"**



இது எதைக்குறிக்கிறது? இது யூத மார்க்கத்திற்கும் கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் , யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான பிரிவினையைக் குறிக்கும்

**"பெரும்பிளவு"** - என்பது ஒரு தடை அல்லது தடுப்பு ஆகும். இது எதைக்குறிக்கிறது? இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுவதில் யூதர்கள் காண்பித்த அவநம்பிக்கையாகும். அதன்மூலம்

இயேசுவை ஏற்றுக்கொள்ளமுடியாதவர்களானார்கள்.

"இவ்விடத்திலிருந்து(ஆபிரகாம் பக்கம்) உங்களிடத்திற்கு கடந்துபோகவும் என்பது, **கிறிஸ்தவ போதனைகளினால்** நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் தேசத்தை மீட்க **இயலாததைக்** குறிக்கும். உதாரணம் -

**கலாத்தியர் 3:1 - "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே"**

**அவ்விடத்திலிருந்து(ஐசுவரியவான் பக்கம்) எங்களிடத்திற்கு வரக்கூடாதபடிக்கு**" -என்பது யூதர்கள் வேறொரு யுகத்திற்கு உரியவர்கள் என்ற உண்மையையும், மோசே மற்றும் நியாயப்பிரமாணத்தை பின்பற்றி இயேசுவை நிராகரித்து, அவரை அங்கீகரிக்கத் தவறினதையும் குறிக்கும். இதைக்குறித்து நாம் வாசிக்கையில்,

**யோவான் 3:28,29 - "நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர். மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம். இவன் எங்கேயிருந்து வந்தாதென்று அறியோம் என்றார்கள்"**

***ஆம், உண்மையில் ஒரு பெரிய பிளவு இருந்தது***. இதைக்குறித்து வாசிக்கையில்,

**லூக்கா 16:27-31 - "அப்பொழுது அவன் - அப்படியானால் தகப்பனே எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன்போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி, அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன், அப்படியல்ல ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.அதற்கு அவன் அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்"**

ஆம் . இது சுவிசேஷயுகத்தில் இஸ்ரயேல் தேசம் இருந்த உதவியற்ற நிலைமையை காண்பிக்கிறது.

**"ஐந்து சகோதரர்கள்**" - **பத்துக்கோத்திரத்தார் ஆகிய இஸ்ரயேலைக்** குறிக்கும். அதே சமயம், **ஐசுவரியவான்"இரண்டு கோத்திரத்தார்"** ஆகிய யூத தேசத்தையும் குறிக்கும். சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, பன்னிரண்டு கோத்திரத்தாராகிய இஸ்ரயேல் தேசமானது இரண்டு பாகமாகப் பிரிந்தது. யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்கள், ***"யூத தேசம்***" என்றும், மீதமுள்ள பத்து கோத்திரங்களும் ***"இஸ்ரயேல் தேசம்*** "என்றும் அழைக்கப்பட்டது**(2நாளாகமம் 11:1-4).** இங்கு **"ஐசுவரியவான்" இரண்டு கோத்திரங்கள் அடங்கிய யூத தேசத்தைக்** குறிக்கிறார். அப்படியானால், **"ஐந்து சகோதரர்கள்" மற்ற பத்துக் கோத்திரத்தையும்** குறிக்கவேண்டும்.

**"மோசே மற்றும் தீர்க்கதரிசிகளும்"** - இது பழைய ஏற்பாட்டையும், மேசியா தன் உபத்திரவம் மற்றும் மரணம் மூலம் மகிமை அடைவதைப் பற்றியும், அவருடைய இராஜ்யத்தைக்குறித்தும் சாட்சியாக ஏசாயா 53 மற்றும் சங்கீதம் 22 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் குறிக்கும். ஆம். யூதர்கள் மேசியாவைக் குறித்த இந்தக் காரியங்களை அறியவில்லை. அதன்மூலம் இயேசுவை அறியாமற் போனார்கள்.

**"மரித்தோரிலிருந்து ஒருவன் அவரிடத்திற்குப் போனால்"**- இங்கு குறிக்கப்படுவது இயேசுவைப் பற்றியல்ல. இது நேரடி பாஷையாக இல்லாமல், உவமை பாஷையில் கூறப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அப்படியானால், மரித்தபின் எழுந்ததாக இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது யார், இதற்கான பதிலை வாசிக்கையில்,

**எபேசியர் 2:1 - "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்திருந்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்"**

ஆம். இது **கிறிஸ்தவர்கள் மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களைக்** குறிக்கும். ஏனென்றால், உலகம் இன்றும் இருக்கக்கூடிய **"மரித்த"** நிலைமையிலிருந்து **"உயிர்ப்பிக்கப்பட்டவர்கள்"** அவர்களே **(லூக் 9:60)**. ஆதலால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் எந்த ஒரு முயற்சியும் **யூத தேசத்தைக் காப்பாற்ற இயலவில்லை.**

**ஆகையால் இஸ்ரயேலின் நிலைமை என்னவாகும்?** இதற்கான பதிலை வாசிக்கலாம்:

**ரோமர் 11:25-26 - "..புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.. இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்"**

ஆம். இஸ்ரயேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம். அவர்களுடைய இரட்சிப்பு சபையினுடைய இரட்சிப்பைத் தொடர்ந்து நிறைவேறும். அதன்மூலம் தேவன் தம்முடைய திட்டத்தில் ஏற்படுத்தியிருக்கும் இரண்டு விதமான இரட்சிப்பை அறிந்துகொள்ளலாம். சபை நிறைவடைந்தபின், இஸ்ரயேலின் அவபக்தி மற்றும் குருட்டு நிலைமை எடுத்துப்போடப்படும்.

இப்படியாக இந்த உவமையானது இரண்டு வகுப்பாரையும், இரண்டு யுகங்களில் அவர்களின் நிலைமையையும் குறிக்கிறது. இந்த வார்த்தைகளை இயேசு அந்த இரண்டு யுகங்களும் **சந்திக்கின்ற** காலத்தில் யூதயுகத்தின்முடிவு மற்றும் சுவிசேஷயுகத்தின் துவக்கக் காலத்தில் இருந்துகொண்டு பேசினார்.

***ஆம். இது, இரண்டு யுகங்களைப் பற்றின மாபெரும் உண்மையாகும்.***

இதன்மூலம் சகோதரர்களே,இங்கு சொல்லப்பட்ட பாதாளம் வேதனை ஸ்தலமாகவோ, ஆபிரகாமின் மடி பரலோகமாகவோ, அல்லது மரித்தபின் ஆத்துமா அழியாது என்பதாகவோ கர்த்தர் கூறவில்லை என்பது தெளிவாகிறது.

***தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.***

+++